தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




## லீதியாள்

## Lydia

கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்


மரம் 14 அக்டோபர் 2014 கனி 11



R.N.I.No.TNTAM/2000/3629 Postal
Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office
on 10 th Oct. 2014



Owned and published by B. Arjunan from 17.2.102
D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed
by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24
Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.



BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com


To

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்"
அப்போஸ்தலர் 16:31


*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA




வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையில் வெளியிட்ட
முதல் DVD மற்றும் CD யை P.ரவிக்குமார் பெற்றுக்கொண்டார்

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:**
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

**Editor:**
**B.ARJUNAN**

**Associate Editors:**
**S.Reagan**
**A.Kanagaraj**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட் அவர்களின் செய்தி
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட் அவர்களின் வேதபாடம்
உதவி எழுத்தாளரின் செய்தி
மற்றும்
வாலிபர் பகுதி
பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி
வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 170

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடையை வசன ஆதாரத்துடன் எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பவும்.

1. நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுபோகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
2. நாங்கள் தேசத்து ஜனங்களிலுள்ள அந்நிய ஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்டதினால் எங்கள் தேவனுக்கு விரோதமாக பாவஞ்செய்தோம் என்று யாரை நோக்கி யார் சொன்னான்?
3. தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டுமென கண்காணியானவனுக்கு போதிக்கப்பட்டதா?
4. யார் நியாயப்பிரமாணபுஸ்தகத்தை வாசிக்கும்போது சகல ஜனங்களும் நியாயப்பிரமாண புஸ்தகத்திற்குக் கவனமாய்ச் செவிகொடுத்தார்கள்?
5. உமக்குச் சரீரத்தின்படியேயும் கர்த்தருக்குள்ளும் எவ்வளவு பிரியமுள்ளவன் என்று பவுல் யாரைக்குறித்து யாருக்கு எழுதுகிறார்?
6. ஆகாரியனான அம்மெதாத்தாவின் குமாரனும் யூதரின் சத்துருவுமாகவும் இருந்தவன் யார்?
7. எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்கும் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் எப்பிள்ளைகளாயிருப்பீர்களே என்கிறார்?
8. அசுத்தமானதிலிருந்து சுத்தமானதைப் பிறப்பிக்கத்தக்கவன் உண்டோ?
9. சூரியன் கடும் வெய்யிலுடன் உதித்து, புல்லை உலர்த்தும்போது, அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்துபோம்; அப்படியே தன் வழியில் வாடிப்போகிறவன் யார்?
10. உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபைநடுவில் உம்மைத்துதிப்பேன் என்ற தேவனுடைய தாசன் யார்?

## லீதியாள் Lydia

- பிலிப்பு பட்டணத்தில் வசித்து வந்த தியத்தீரா ஊராளாகிய லீதியாள் கிறிஸ்தவளாக மாறி, பவுலுக்கும் அவனுடைய உடன் ஊழியர்களுக்கும் தன் வீட்டை திறந்து கொடுத்தாள் (அப்.16:14,40)
- இவள் இரத்தாம்பரம் விற்கிறவளாயிருந்தாள் (அப்.16:14) (வியாபார கப்பலைப்போல)
- இவள் செல்வந்தமிகுந்தவளும், தேவபயமிக்கவளுமாயிருந்தாள் (அப்.16:14)
- இவள் தன் வீட்டாரோடுகூட ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டவள் (அப்.16:15)
- இவளுடைய வீடு பிலிப்பு பட்டணத்தில் பவுலின் ஊழியத்திற்கு அடித்தளமாக விளங்கியது (அப்.16:12)



சிறுவர் பகுதி

# பொறுமை
## Patience

வேத பகுதி: யாக்கோபு 1:4

ADS.Sugumar



அன்பார்ந்த தம்பி தங்கைகளே உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

ஆமாம், அது என்ன பொறுமை அப்படி என்றால் என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?

பொறுமை என்பது நம் வாழ்க்கையில் சிறுவயது முதல் கடைபிடிக்கவேண்டிய முக்கிய அம்சமாகும். ஆமாம் அதை எப்படி கடைபிடிப்பது. உன் பெற்றோர் உன்னைக் கண்டிக்கும்போதும், உன் ஆசிரியர் உன்னைக் கண்டிக்கும்போதும், பெரியவர்கள் உனக்குப் புத்தி சொல்லும் போதும், நீ கோபப்படாமல் எரிச்சலடையாமலும், வருத்தப்படாமலும் அதை ஏற்றுக்கொள்ளுவதுதான் பொறுமை. உன்னிடத்தில் தவறு இல்லாவிட்டாலும் புத்தி சொல்லுகிறவர்களை எதிர்த்துப்பேசாமல், வாக்குவாதம் செய்யாமல் இருப்பதுதான் பொறுமை.

சரி இந்த பொறுமையைப்பற்றி நம் பரிசுத்த வேதம் என்னசொல்லுகிறது என்று பார்ப்போம்.

யாக்கோபு 1:4 நிறைவுள்ளவர்களாயிருக்க பொறுமை தேவை.

எபிரெயர் 10:36 வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொள்ள பொறுமை தேவை.


ரோமர் 8:24,25 பொறுமை பரீட்சைக்கு வழி வகுக்கிறது.

ரோமர் 15:4,5 தேவனை மகிமைப்படுத்த பொறுமை அவசியம்

2பேதுரு 1:6 தேவபக்தியை பெற பொறுமை தேவை.

2பேதுரு 3:9 தேவனுடைய பொறுமையைப் பற்றி படிக்கிறோம்.

2தீமோத்தேயு 2:24 ஊழியருக்கு சகிப்புத்தன்மை அதாவது பொறுமை தேவை. இப்படியாக நம் வேதம் பொறுமையைப் பற்றியும், அது நம் வாழ்க்கைக்கும் நாம் பரலோகம் செல்வதற்கும் வழிகாட்டுகிறது. அதுமட்டுமல்ல ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் காக்கப்படவேண்டுமென தேவன் பொறுமையாயிருக்கிறார். எனவே அன்பான பிள்ளைகளே நீங்களும் இந்த சிறு வயதிலேயே பொறுமையின் பிள்ளைகளாய் வளர முடிவு செய்யுங்கள். உங்கள் நண்பர்களுக்கும் பொறுமையைப் பற்றிச் சொல்லுங்கள். தினமும் பொறுமைக்காக தேவனைநோக்கி ஜெபம் பண்ணுங்கள். உங்கள் பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும், பெரியவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடந்துகொண்டால் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். அடுத்த மாதம் சந்திப்போமா? நன்றி.



**என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள்" யாக்கோபு5:10**



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 14 அக்டோபர்-2014 கனி - 11

ஆசிரியருரை

# மூன்று காலங்களில் தேவன்
## God, In Three Periods



மூன்று காலங்களில் தேவன் ஜனங்களோடு எப்படி தொடர்பு கொண்டார் என்பதைக் குறித்து தியானிப்போம்.

**முற்பிதாக்களின் காலத்தில் தேவன்.** நம்முடைய முற்பிதாக்களோடு பேசிவந்தார். "பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்" என்று ஆதியாகமம் 3:8-ம் வசனத்தில் படிக்கிறோம். தேவன் ஆதி முற்பிதாவாகிய ஆதாமோடு பேசினார். 'ஆதாமே நீ எங்கே இருக்கிறாய்' என்று கேட்டார். அதைப்போல நோவாவின் நாட்களில் பார்க்கும்போது; "தேவன் நோவாவை நோக்கி: மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினாலே நிறைந்தது; நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப்போடுவேன்" என்று சொன்னார் (ஆதி.6:13). அந்நாட்களில் நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். அவன் தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான். குறிப்பாக தேவன் ஆதி முற்பிதாக்களோடு பேசும்போது குடும்பத்தலைவர்களோடு பேசிவந்தார் எனக் காண்கிறோம். ஒரு குடும்பத்திற்கு கணவன் தலையாயிருக்கிறான். அவனை தேவன் முதலாவது உண்டாக்கினார். ஆகையால் அவனோடு பேசிவந்தார். தாம் செய்யப்போகிற காரிங்களைக்குறித்தும், அவர்கள் நடக்கவேண்டிய விதத்தைக்குறித்தும் அவனோடு தம்முடைய வார்த்தையின் மூலமாக பேசிவந்தார். ஆனால் இன்று தேவன் அவ்விதமாக நம்மோடு பேசுவதில்லை. பரிசுத்த வேதாகமத்தின் மூலமும், தேவன் தாம் தெரிந்துகொண்ட ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவும், அவருக்குப்பின் அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தேவ தாசர்கள் எழுதிய வேத வாக்கியங்களின் மூலமாகவும் இன்று திருவுளம் பற்றுகிறார் என அறிகிறோம்.

நோவாவுக்கு பின்பு முக்கியமான நபர்களில் ஆபிரகாமைக்குறித்து படிக்கிறோம். "கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை

ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்" (ஆதி.12:1-3). இந்த வார்த்தைகளை ஆபிரகாமோடு தேவன் பேசும்போது; அவன் உடனே அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தன் மனைவி சாராளை அழைத்துக்கொண்டு தேவன் காண்பிக்கும் தேசத்துக்கு சென்றான். அங்கு அவனுடைய கையாட்சிக்கு கையளவு இடமுமில்லை. அழைத்த தேவனை நம்பி கடந்துசென்றான் அவனோடு கர்த்தர் இருந்தார். அவன் விசுவாசத்தினாலே ஆசீர்வதிக்கப்பட்டான். இன்றளவும் ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பனாயிருக்கிறான். அதற்குப்பின்பு யாக்கோப்புடன் பேசும்போது; "நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும் வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்" (ஆதி.28:13-15). யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்தபோது மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்; இதை நான் அறியாதிருந்தேன் என்று சொல்லி அந்த இடத்திற்கு பெத்தேல் என்று பேரிட்டான். கர்த்தர் யாக்கோபோடு இருந்து காரியங்களை வாய்க்கச்செய்தார்.

**இஸ்ரவேலின் காலத்தில் தேவன்:** மோசே இஸ்ரவேலை வழிநடத்தின மாபெரும் வழிகாட்டியாக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர். இவனோடும் கர்த்தர் பேசிவந்தார். இவனோடு தேவன் முகமுகமாய் பேசிவந்தார் என்று காண்கிறோம். நாற்பது நாள் தேவ பர்வதத்தில் தேவனோடு இருந்து கட்டளைகளைப் பெற்றவர் மோசே. இஸ்ரவேலை எகிப்திலிருந்து கானான் தேசத்திற்கு வழிநடத்தியவர். தேவன் இவனைக் கொண்டு அநேக அடையாளங்களையும் அற்புதங்களையும் எகிப்திலே நடத்தினார். மோசே ஜலத்திலிருந்து எடுக்கப்பட்டவன். தேவன் இவனோடு பேசும்போது; "இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்" (யாத்.3:14).

இப்படி மோசேயைக் கொண்டு இஸ்ரவேலை வழி நடத்தினார். நம்முடைய பிதாவாகிய தேவன் அற்புதவிதமாக தம்முடைய ஜனங்களை வழிநடத்திக்கொண்டு வந்தார். அவர்கள் மத்தியில் உலாவுகிற தேவனாக இருந்தார். அவர்களை எதிர்க்க ஒருவராலும் கூடாதிருந்தது. ஏனெனில் அவர்களை அழைத்த தேவன் அவர்களோடிருந்தார். "கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும் இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன்சென்றார். பகலில் மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினிஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப்போகவில்லை" (யாத்.13:21,22). எந்த அளவு இஸ்ரவேலரை தேவன் நேசித்து, அவர்களை கழுகு தன் குஞ்சுகளை சுமப்பதுபோல சுமந்து வந்திருக்கிறாரென்று பார்த்தீர்களா? "அவர் யாக்கோபிலே அக்கிரமத்தைக் காண்கிறதும் இல்லை, இஸ்ரவேலிலே குற்றம் பார்க்கிறதும் இல்லை, அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களோடே இருக்கிறார்; ராஜாவின் ஜயகெம்பீரம் அவர்களுக்குள்ளே இருக்கிறது" என்று எண்ணாகம புத்தகத்தில் படிக்கிறோம் (எண்.23:21). தேவன் தெரிந்துகொண்டவர்கள் மீது குற்றம் சுமத்த யாராலே கூடும். அவன் நின்றாலும் விழுந்தாலும் தேவனுக்கே கணக்குக்கொடுக்கவேண்டும் என்ற வசனத்தின்படி அவர் அவர்களிலே குற்றம் பார்க்கவில்லை. எகிப்திலே அடிமைகளாக இருந்த அவர்களை அணியணியாய் புறப்படப் பண்ணினார்.



2. எதிரிகளை பொறுத்துக் கொள்ளாதவராகவே தேவன் பழைய ஏற்பாட்டில் சித்தரிக்கப்படுகிறார்.

உன் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி அவர் எரிச்சலுள்ள தேவன் (உபா.4:24).

3. சபையானது முற்றிலும் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்க வேண்டும். (2கொரிந்தியர் 11:3)

அ) எளிமை என்பது தனித்திருப்பது அல்லது உண்மையாயிருப்பது. உங்கள் மனங்கள் கிறிஸ்துவிடமுள்ள அர்ப்பணிக்கப்பட்ட ஒருமையினின்றும் தூய்மையினின்றும் வந்தது.

ஆ) ஒரே மனதையுடைய பக்தி இது இருமனமென்பதன் எதிர்ச்சொல் என்கிறார் வின்சென்ட். பாவிகளே, உங்கள் கைளை சுத்திகரியுங்கள் இருமனமுள்ளவர்களே உங்கள் இருதயங்களைப் பரிசுத்த மாக்குங்கள் (யாக்.4:8).

இ) இது ஆதித்திருச்சபையின் தன்மைகளில் ஒன்றாயிருந்தது. அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி (அப்.2:46).

ஈ) பவுல்... எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம் (2கொரி.10:5).

உ) பிசாசு தேவனுடைய பிள்ளைகளின் கவனத்தை உடைக்க விரும்புகிறான்.

1. ஆவிக்குரிய அடிமையாகாதிருங்கள்.

2. ஞாயிறு கிறிஸ்தவர்களாக மட்டுமிருங்கள்.

3. உன்னால் இயன்ற மட்டும் வாழ்க்கையின் எல்லா இன்பங்களையும் அனுபவி.

**முடிவுரை**

1. கிறிஸ்துவின் செய்தியை தங்கள் வாழ்க்கையில் பின்பற்றியதில் தெசலோனிக்கேய சபை ஒரு மாதிரி சபையாக இருந்தது.


2. நாமும் கிறிஸ்துவின் செய்தியைக் கடைப்பிடித்து கிறிஸ்துவை உண்மையாய் பின்பற்றுகிறவர்களாயிருப்போம்.

3. நாம் வாழ்கின்ற காலத்திலுள்ள விக்கிரகங்களுக்கு விலகி நம் முகத்தை ஜீவனுள்ள தேவனுக்கு நேராகத் திருப்புவோம்.

## இளமை, இனிமை

- வில்லியம் மிட் என்பவர் தனது 14-ம் வயதில் அரசியல் கலந்த அருமையான கடிதம் எழுதி புகழ் பெற்றார்.
- விக்டர் ஹியூகோ தனது 15-வது வயதில் பிரெஞ்சு இலக்கிய கழகத்துக்கு சிந்தனைகள் பொதிந்த கவிதைகள் எழுதி அனுப்பினார்.
- மாவீரன் அலெக்சாண்டர் 16 வயதிலேயே தனது தந்தையின் போர்ப் படையில் தளபதியானார்.
- விஞ்ஞானி கலிலியோ தனது 17- வது வயதில் பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்திலுள்ள விளக்கு இப்படியும், அப்படியும் ஊசலாடுவது ஏன் என்பது குறித்து ஆராய்ந்தார்.
- பீதோவன் தனது 21வது வயதில் இசை உலகில் தன் பெயரை நிலை நாட்டினார்.

KRK. Ravi Asir
Associate Editor




# பாடம் -8 மாதிரி சபை *- Jerry Bates*

-மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை

**நம்பிக்கையில் பொறுமை**

## Patience of Hope

பொறுமை சகிப்புத்தன்மையை உண்டாக்குகிறது. அது நம்மை தொடர்ந்து, தொடர்ந்து உழைக்கச் செய்கிறது. வில்லியம் பார்க்லி பின் வருமாறு சொல்கிறார். நம்பிக்கை இருக்கும் மட்டும் ஒரு மனிதன் எதையும் சகிக்கலாம். அதன்பின் அவன் இருளை நோக்கி அல்ல விடியலை நோக்கி நடந்து செல்வான்.

3. அவர்களுடைய நம்பிக்கை ஜீவனுள்ளது.

இயேசு மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு அவ்வண்ணமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

வரப்போகிற தேவ கோபாக்கினையிலிருந்து அவர்களை இரட்சிப்பார் (2தெசலோனிக்கேயர் ஜுவாலித்தெரிகிற அக்கினி மற்றும் தேவபிரசன்னத்திலிருந்து வரும் நித்திய அழிவு)

கேள்விக்கிடமில்லாத விசுவாசம் சபையும் கிறிஸ்துவுக்கு மனவாட்டி என்று சித்தரிக்கப்பட்டிருக்கிறது (2கொரிந்தியர் 11:2).

1. மணப்பெண் தன்னை உண்மையுள்ளவளென்று வெளிப்படுத்துகிறாள்.

திருமணம் என்பது ஒப்புக்கொடுப்பது. அன்பு, விசுவாசம், ஜீவன் அனைத்தும் தேவைப்படுகிற ஒரு உடன்படிக்கை. எல்லாருமே திருமணம் என்பது அர்ப்பணிப்பது என்று புரிந்து கொள்ளுகின்றனர். ஆகவே தான் மக்கள் ஒன்றாக வாழ்கின்றனர். ஆனால் அவர்கள் திருமண மகிழ்ச்சியை (ஒருவருக்கொருவர் முற்றிலும்) அர்ப்பணிக்காமல் பெற்றுக்கொள்ள விரும்புகின்றனர்.

பிரிந்து போவதைவிட மரிப்பதையே தெரிந்துகொண்ட கணவன் மனைவியைப் பற்றிகேட்டிருக்கிறோம். அவர்களுடைய உயிரை விடவும் அவர்களின் இருதயம் ஒருவருக்காக ஒருவர் தியாகம் செய்தது பெரிதாயிருந்தது.

கிறிஸ்துவிடம் நமக்கிருக்கும் உண்மையான விசுவாசம் நம்மிடமிருக்கும் எல்லாவற்றின் மேலுள்ளதைக் காட்டிலும் அதிகமாயிருக்க வேண்டும்.

பவுல் கொரிந்தியர்களை ஒரே கணவனுக்கு மணவாட்டியாக நியமிக்கிறார். மணம்புரிதல் என்பதற்கான வார்த்தை (மத்.1:18,19) மரியாள் யோசேப்புக்கு, நியமிக்கப்பட்டிருந்தாள் என்பதற்கான வார்த்தையினின்றும் மாறுபட்டது. அதன் நேரடியான அர்த்தம் இணைக்கப்படுவதென்பதாகும். மணவாட்டி எப்படி மணவாளனோடு இணைக்கப்படுகிறாளோ அப்படியே சபையும் கிறிஸ்துவுடன் இணைக்கப்படுகிறது.

ஒரு மனைவி தன் கணவனுக்கு துரோகமிழைப்பதென்பது நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒன்று. ஆகவேதான் அதைப் பவுல் கிறிஸ்தவனுக்கு கிறிஸ்துவின்பால் உள்ள நம்பகத்தன்மையை ஒப்பிட்டு சொல்கிறார்.

3. ரோமர் 7:1-4-ல் ஒருவரை மணமுடிக்கும்படி பிரமாணத்தினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம் என்கிறார்.

4. உண்மையாய் இருப்பதன் அவசியத்தை உணர்த்த யாக்கோபு கிறிஸ்தவர்களை விபசாரரே, விபசாரிகளே என்கிறார். உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்று அவர் சொன்னார். எந்த உறவை விடவும் கிறிஸ்துவிடம் நாம் ஏற்படுத்தின ஒப்படைப்பு மிகவும் முக்கியமானது (லூக்.14:33). அப்படி உங்களில் ஒருவன் தனக்குள்ள தெல்லாவற் றையும் வெறுத்துவிடாவிட்டால் அவன் என் சீடனாயிருக்க முடியாது (லூக்.1:33).

1. பவுல் அவர்களுக்காக வைராக்கியமுள்ளவராயிருந்தார். அது தனிப்பட்ட விசுவாசமல்ல. ஆனால் தேவனுக்கேற்ற வைராக்கியம்



மேலும் நாம் வாசிக்கிறோம்; "நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?" (உபா.4:7). எகிப்து மந்திரவாதங்களும் சூனியங்களும் நிறைந்த இடம். இன்னும் சொல்லப்போனால் விக்கிரக ஆராதனை பெருகிய இடம். ஆனால் அவர்கள் ஜீவனுள்ள தேவனை கண்டுகொள்ள வில்லை. நடக்கமாட்டாத பேசமாட்டாத தேவனையும் தேவிகளையும் இயற்கைகளையும் வணங்கிவந்தனர். ஆனபடியாலே இவ்வசனத்தில் அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது என கேள்வி எழுப்புகிறார். அவ்வளவு சமீபமாக இஸ்ரவேலின் தேவன் அவர்களுக்குள்ளே உலாவுகிற தேவனாக இருந்தார். தேவன் செய்கின்ற அற்புதங்களை கண்கூடாக கண்டார்கள். ஆனால், எகிப்தின் ஜனங்கள் கண்டு கலங்கினார்கள். மிகவும் வைராக்கியமுள்ளவனாயிருந்த பார்வோனின் இருதயம் கரைந்துபோயிற்று. தேவனுக்கு முன்பாக அவனால் நிற்கமுடியாமற்போனது. பார்வோனையும், அவன் இரதத்தையும், குதிரை வீரரையும், சிவந்த சமுத்திரம் மூடிப்போட்டது. அன்பானவர்களே, நம்முடைய முற்பிதாக்களையும், இஸ்ரவேலையும் அவரவருடைய காலத்தில் தேவன் கண்மணியைப்போல காத்து வழிநடத்தி வந்தார். அவர்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். ஆகையால் அவர்கள் சோர்ந்துபோகும்போது அவர்களை அவரவருடைய முற்பிதாக்களின் மூலமாக பேசி அவர்களை தேற்றி ஆலோசனைகளைக் கொடுத்து வழிநடத்தி வந்தார். உலகமெங்கிலும் அவர்கள் பழுகி பெருகினார்கள். ஏதேன் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட மனித இனம் பூமியை அவருடைய வார்த்தையின்படி அவருடைய சித்தத்தின்படி நிரப்பிற்று.

**கிறிஸ்துவின் காலத்தில் தேவன்:** கிறிஸ்துவின் காலத்தில் இருக்கிற நீங்களும் நானும் கிறிஸ்துவின் வசனத்திற்கு செவிகொடுக்கவேண்டும்; "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" என்று இயேசு சொல்கிறார் (யோவா.14:23). இன்று நம்மத்தியில் தேவன் வாசம் பண்ண நாம் இயேசுவினிடத்தில் அன்பாயிருந்து, அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளும்போது, பிதாவாகிய தேவன் நம்மில் அன்பாயிருப்பார். அவர்கள் வந்து நம்மோடே வாசமாயிருப்பார்கள். தேவன் இப்படிப்பட்டவர்கள் மத்தியில் தற்போது வாசம் பண்ணுகிறார். நாம் ஆலயங்களை நாடிப்போக வேண்டியதில்லை. ஏனெனில்; நீங்களே தேவனுடைய ஆலயமாக இருக்கிறீர்கள் என வேதம் போதிக்கிறது. பலி இடவேண்டிய அவசியமில்லை. இயேசுவே நித்திய பலியாக ஒரே பலியாக சிலுவையில் தம்மை ஒப்புக்கொடுத்து, பாவத்திலிருந்து மனிதனுக்கு நித்திய விடுதலையைக் கொடுத்தார்.

இயேசு சொல்கிறார்; "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" (மத்.18:20). இயேசுவின் நாமத்தில் எங்கே கூடுகிறார்களோ அங்கே ஆண்டவர் இருக்கிறார். இன்று நாம் கிறிஸ்துவின் மூலமாக தேவனை நோக்கி ஜெபிக்கிறோம். கிறிஸ்துவின் நாமத்தினால் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறோம். பிதாவாகிய தேவன் ஆண்டவர் இயேசுவை முன்குறித்தார். இவர் என் நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவிகொடுங்கள் என்று பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா? இல்லையே! வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை.

"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" என எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் (எபி.1:1,2). இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நேயரே மூன்று காலங்களில் நம்முடைய பிதாவாகிய தேவன் இருக்கிறவராகவே இருந்துகொண்டு, "கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்" என்று வாசிக்கிறோம் (அப்.17:27,28). இச்செய்தியை வாசிக்கிற உங்களுக்கு அவர் தூரமானவரல்ல. அன்பாவர்களே, அவரில் நிலைத்திருந்து அவரை ஆவியோடும் உண்மேயோடும் ஆராதியுங்கள்.

**மூன்று காலங்களிலும் ஆண்டவர் இயேசு இருந்தாரா?**

ஆம், "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது" என்று யோவான் 1:1-4 வசனங்களில் படிக்கிறோம். அவராலே சகலமும் உண்டாக்கப்பட்டது. இஸ்ரவேலின் காலத்தில் கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள் அந்த கன்மலை கிறிஸ்துவே என காண்கிறோம். என் மீட்பர் உயிரோடிருக்கிறார் அவரை நான் கடைசி நாட்களில் பார்ப்பேன் என யோபு சொல்கிறார். கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்துகொண்டிருந்த அப்போஸ்தலர்கள் அவரைக் குறித்து சொல்லும்போது; "ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும் எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது, ... நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" என்றார்கள் (1யோவா.1:1-3). மூன்று காலங்களிலும் இருந்த இயேசு கிறிஸ்து இக்கடைசி காலத்தில் நம்மோடு ஜீவிக்கிறார். உங்களோடும் கர்த்தர் இருக்க உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். 9443558041





**ஜெபியுங்கள்**

- கடந்த மாதம் நாமக்கல் மாவட்டம் பாண்டமங்கலத்தில் ஐந்துபேரும், தேனிமாவட்டம் ஆனைமலையான்பட்டியில் ஏழு பேரும் கர்த்தருடைய சுவிசேஷ வசனத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டனர் இவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காக...
- கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யும் தேவனுடைய தாசர்களுக்காக...
- கடந்த மாதம் 29-ம் தேதி குமுளியில் The 4th World Evangelism Retreat சிறப்பாக நடை பெற்றதற்காக...





இரண்டாவதாக, அந்த ஸ்திரீகள் ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தரித்திருந்தார்கள். நாம் கூடி ஜெபிக்கையில் இவ்வாறு இருக்கிறோமா? அல்லது ஜெபம் முடிவதற்குள் நம்சொந்த வேலைகளினிமித்தம் இடையிலேயே எழுந்து சென்று விடுகிறோமா? ஆதி அப்போஸ்தலர்களோடேகூட, ஸ்திரீகளும் உறுதியுடனிருந்தனர். புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் என்ற வசனத்தின்படி சபை சகோதரர்களோடு ஒருமனப்பட்டவர்களாக ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தரித்திருந்த சமயத்தில் கிறிஸ்துவின் சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. இன்றும் நம் தமிழகம் முழுவதும், ஏன் நம் பாரதம் முழுவதும் ஆங்காங்கே கிறிஸ்து தமது சபையை ஸ்தாபிக்க வல்லவராயிருக்கிறாரே. நம்மைப் பாவத்திலிருந்து மீட்க இரத்தம் சிந்தி மரித்த இயேசுவுக்காக நீ என்ன செய்யப்போகிறாய்? என்பதை சிந்தித்துப்பார். முதலாவது மீட்பின் செய்தியை யூதர்களுக்கு அறிவித்த அன்னாளைப் போலவும் முதல் ஜெபக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்திரீகளைப்போலவும், இயேசுவுக்காக, இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்திற்காக எதையும் செய்ய முதலாவதாக இருப்போம்.

**வேத அறிவுப்போட்டி: 169 -ல் வெற்றிபெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1. Tmt. மரகதம் திரவியம் | - கோம்பை |
| 2. A. ரெபேக்காள் | - மதுரை |
| 3. R. கஸ்தூரி | - ஓட்டநத்தம் |
| 4. M. இராமச்சந்திரன் | - ஓட்டநத்தம் |
| 5. D. சாந்தாதேவி | - தேனி |
| 6. K. மோகன் | - குமாரபாளையம் |
| 7. T. இராஜாத்தி | - கோம்பை |
| 8. J. ஜோதிகாந்தம் | - போடப்பாறை |
| 9. G. பூங்கோதை | - ஈரோடு |
| 10. IRA. எதிராசன் | - சங்கரி |
| 11. Mrs. ருக்மணி ஜெயசீலன் | - தேனி |
| 12. E. டென்சிங்மனோகர் | - குஜராத் |
| 13. T. ஏஞ்சலின் நேச மலர் | - மதுரை |
| 14. S. தங்கம் | - கன்னியாகுமரி |
| 15. C. ரித்திக் | - நாமக்கல் |
| 16. D. அபிஷேக் | - ஈரோடு |
| 17. D. உமா மகேஷ்வரி | - பாண்டமங்கலம் |
| 18. P. ரூபினி | - கரூர் |
| 19. Bro. இம்மானுவேல் | - பரமத்திவேலூர் |
| 20. E. பழனிச்சாமி | - பொத்தனூர் |
| 21. P. மார்த்தாள் | - பாண்டமங்கலம் |
| 22. S. சூர்யபிரகாஷ் | - பாண்டமங்கலம் |
| 23. P. ரூத் பிரின்ஸி | - பாண்டமங்கலம் |
| 24. S. சிம்சோன் | - பாண்டமங்கலம் |
| 25. C. அதிசயா | - நாமக்கல் |
| 26. S. ரோஸ்லின் | - பாண்டமங்கலம் |
| 27. C. தமிழ்செல்வன் | - நாமக்கல் |
| 28. D. கவிதா | - ஈரோடு |
| 29. D. ஆசா | - ஈரோடு |
| 30. S. ஏஞ்சல் | - நாமக்கல் |
| 31. Mrs. பொன்னிவிக்டர் | - திருப்பூர் |
| 32. Mrs. ராஜம்மாள் | - திருப்பூர் |
| 33. D. டேவிட் | - சென்னை |
| 34. Mrs. சாந்தா பழனி | - தருமபுரி |

**"வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்"**
**சங்கீதம் 119:113**



## நடப்புச் செய்திகள்...

- ☐ கொடைக்கானல் பகுதியில் தடுப்பணைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட நீர் நாய்.
- ☐ ஆசிய விளையாட்டுப்போட்டியில் இந்திய அணி துப்பாக்கி சுடுதலில் மேலும் ஒரு வெண்கலப்பதக்கத்தை தனதாக்கியது.
- ☐ காஷ்மீரில் பெய்த கனமழையால் எல்லைப்பகுதியில் 40 கி.மீ தூரத்திற்கு பாதுகாப்பு வேலி நாசம்.
- ☐ இந்தியாவில் வாழும் முஸ்லீம்கள் அல்கொய்தாவின் பாட்டுக்கு ஆடமாட்டார்கள். மோடியின் இந்தக் கருத்துக்கு முஸ்லிம் அமைப்புகள் வரவேற்பு.
- ☐ பிரதமர் நரேந்திரமோடியை, அவருடைய இல்லத்தில் டாக்டர் பால்தினகரன் நேரில் சந்தித்தார்.

**வேத அறிவுப்போட்டி: 169 -ன் விடைகள்**

| | |
|---|---|
| 1. பவுல் | - பிலி.1:24 |
| 2. இஸ்ரவேலின் கோத்திரங்கள் | - 2சாமு.5:1 |
| 3. அந்த இரகசியம் | - கொலோ.1:27 |
| 4. அந்நியதேவர்களை | - 1இரா.11:9 |
| 5. தேவனுக்குள் | - 1தெச.2:2 |
| 6. நாகமான் | - 2இரா.5:17 |
| 7. ஆம் | - 2தெச.3:1 |
| 8. தாவீது | - 1நாளா.225 |
| 9. தீமோத்தேயுவுக்கு | - 1தீமோ.6:20 |
| 10. யோசியா | - 2நாளா.36:19 |

உங்களைக் குறித்தும், உங்களுடைய இழப்பு, வேதனை கஷ்டம், நஷ்டம், உங்களுடைய உறவுகள் இதுபோன்ற இன்னும் எத்தனையோ காரியங்களைக் குறித்தும் சிந்தித்துக்கொண்டு இருக்கிறீர்களா? மார்த்தாளைப்போல அநேகக் காரியங்களைக் குறித்து கவலை கொண்டிருப்போமானால் நாம் ஒன்றையும் சாதிக்கப்போவதில்லை. மரித்தோர் மரித்தோரை அடக்கம்செய்யட்டும், நீயோ என்னைப் பின்பற்றி வா என இயேசு கூறிய வார்த்தை உங்கள் செவியில் விழவில்லையா? இயேசுவை அறிந்தும், அறியாதவர்களைப்போல, ஆவியில் மரித்தவர்களாக ஏனோ, தானோவென்று ஜீவிப்பதை தேவன் ஒருபோதும் விரும்புகிறதில்லை. நம்மை நாமே தேவ சமூகத்தில் குணப்படுத்திக்கொண்டு மற்றவர்களை ஸ்திரப்படுத்த இந்த மீட்பின் செய்தியை அறிவிப்போம். மேன்மையான இந்தப் பணிக்கு ஈடான ஒரு பணியும் இவ்வுலகில் இல்லை. இழந்த காரியங்களையே நினைத்துக் கொண்டிராமல் வரப்போகும் பரலோக மேன்மையை நினைத்து ஒவ்வொருநாளும் இழந்துகொண்டிருக்கிற ஸ்திரீகளைக் காப்பாற்றுவோம். அன்னாளைப் போல இரவும் பகலும் தேவசமூகத்தை விட்டு நீங்காமல் தனிப்பட்ட முறையில் உபவாசித்து, ஜெபித்து மீட்பின் செய்தியை அறிவிக்க ஆயத்தப்படுவோம்.

முதல் ஜெபக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் (Those who attended the First Prayear meeting) :

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்கு தரிசனமாகி, அவர்களை நோக்கி பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறும்படி எருசலேமை விட்டுப் போகாமல் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார் (அப்.1:3-5). அதன்படி ‘‘அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்’’ (அப்.1:14). இந்த ஜெபக்கூட்டம் இயேசு பரமேறிச்சென்றபின் கூடின முதல் ஜெபக்கூட்டம். அந்த முதல் ஜெபக்கூட்டத்தில் ஸ்திரீகளும் இயேசுவின் தாயாகிய மரியாளும் இருந்திருக்கிறார்கள். அப்போஸ்தலர்களெல்லாரும் இவர்களோடு ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அந்த ஸ்திரீகள் செய்த காரியங்கள் இரண்டு. ஒன்று, ஒருமனப்பட்டவர்களாயிருந்தார்கள். இயேசுவின் நாமத்தில் கூடுகிற அன்பு சகோதரியே, உங்களிடத்தில் இவ்விதமான ஒருமனமிருக்கிறதா? சபையில் ஒருவர் ஜெபிக்கும்போது கூடியிருக்கிற சிலர் தங்கள் தங்கள் மனதில் என்ன நினைத்திருக்கிறார்களோ அதைச் சொல்லிக்கொண்டிருப்பார்கள் இல்லாவிட்டால் எதற்காக அந்த நபர் விண்ணப்பிக்கிறாரோ அந்த விண்ணப்பத்தில் முழுகவனம் செலுத்திக் கொண்டிருப்பவருக்கு இடையூராக ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று ஓயாமல் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். இப்படி ஜெபிப்பது ஒருமனப்பட்டு ஜெபிக்கின்ற ஜெபமாகவும் விண்ணப்பமாகவும் இருக்கமுடியாது. ஒருமனம் என்றால் ஒரே காரியத்தை கூடியிருக்கிற அனைவரும் மனதில் கொண்டு ஜெபிப்பதாகும். இடைவிடாமல் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள் என வேதம் கூறாமல் ‘‘எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்’’ என்று கூறுகிறது ஆங்கில வேதாகமத்தில் “Give thanks in all circumstances” என்றுள்ளது. அப்படியானால் யோபு கூறினதுபோல் ‘கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்’ என எச்சூழலிலும் ஸ்தோத்திரம் சொல்ல வேண்டும்.



# ஏன் நமக்கு உபத்திரவம்? சோதனை? கவலைப்படாதீர்கள்!

M.Rajamani

எனக்கு அன்பானவர்களே! நாம் யாவரும் தேவனால், தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். கர்த்தர் நம்மை அதிகமாய் நேசிக்கிறபடியால் இந்த பொல்லாத பிசாசிற்கு நம்மீது எரிச்சலும் கோபமும் ஏற்படுகிறது. ஏனென்றால்; இந்த சாத்தான் தேவனுக்கு விரோதமாக அவரால் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொருவரையும் ஒவ்வொரு நாளும் உபத்திரவங்களையும் சோதனைகளையும் கொடுத்துக்கொண்டு வருகிறான். ஆகையால் எனக்கு அன்பானவர்களே, "சோதிக்கப்படுகிற எவனும் நான் தேவனால் சோதிக்கப் படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப் படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்" (யாக்.1:13,14). பிரியமானவர்களே! தேவன் உங்களை பொல்லாங்கினால் சோதிக்கிறவரல்ல. அதற்கு மாறாக "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது" (யாக்.1:17) என்ற வார்த்தையின்படி கர்த்தர் நமக்கு எண்ணிமுடியாத நன்மைகளையும் அளவிட முடியாத ஆசீர்வாதங் களையும் கொடுக்கிறார்.

சகோதர, சகோதரிகளே, இந்த உலகத்தில் உங்களுக்கு பிசாசினால் உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என்று கர்த்தர் நமக்குச் சொல்லியிருக்கிறார். எனவே வேதம் "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு வாக்குதத்தம் பண்ணின ஜீவகிரீடத்தை பெறுவான்" என்று சொல்லியிருக்கிறது (யாக்.1:12). ஆகையால் நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாதிருங்கள். கர்த்தர் உங்களோடிருந்து ஜெயத்தை நிச்சயம் தருவார். நீங்கள் எந்த காரியத்தைக்குறித்தும் எதற்காகவும் கவலைப்படாதிருங்கள்.

# அடைக்கலப்பட்டணங்கள்

S.I.Reagan
Associate Editor

பழைய ஏற்பாட்டில் ஐந்து ஆகமங்கள் உள்ளன அதில் எண்ணாகமத்தில் 35:6-34 -ல் அடைக்கலப்பட்டணங்களை தேவன் ஏற்படுத்துகிறார். 1. இது இஸ்ரவேலர்கள் மூலம் லேவியருக்குக் கொடுக்கும் பட்டணங்களில் இருந்தது 2. எண்.35:13,15 ஆறுபட்டணங்களை அடைக்கலப்பட்டணங்களாக ஏற்படுத்த வேண்டும் என்றார். 3. 35:9 மோசேயின் மூலம் தேவன் இஸ்ரவேலர்களுக்கும் ஏற்படுத்தினார். 4. 35:14 யோர்தானுக்கு இப்புறத்திலும் கானான் தேசத்திலும் அமைக்க தேவன் கட்டளையிட்டார். இவைகள் தான் அடைக்கலப்பட்டணத்தின் சிறிய விளக்கம். ஆனால் இதை தேவன் ஏன் ஏற்படுத்தினார்? என்றால் 35:11 அறியாமல் பாவம் செய்தவன் ஓடிப்போய் தன் ஜீவனை பாதுகாக்கும்படியாகவும், நியாயம் தீர்க்கப்படவும் தான் தேவன் இதை ஏற்படுத்தினார். நியாயப்பிரமாணத்தின்படி புறம்பாக ஒருவன் கொலை செய்தால் அவன் நியாயப்பிரமாணத்தின் சட்டப்படி அவன் கொலை செய்யப்படவேண்டும். ஆனால் அந்த பாவத்தை அறியாமல் செய்தவன் (கைபிசகாய்) ஓடி போய் தன்னை காப்பாற்றிக் கொள்ள இந்த பட்டணத்தை தேவன் ஏற்படுத்தினார். பழைய ஏற்பாட்டில் இது மிகவும் பிரயோஜனமாக இஸ்ரவேலருக்கு அமைந்தது ஏனென்றால் அந்த அடைக்கலப்பட்டணத்தில் சென்றவனை கொலை செய்யக்கூடாது என்பது கட்டளை. யோசுவா 20:1-6 இது பழைய ஏற்பாட்டு அடைக்கலப்பட்டணம் பாவிக்கு மனந்திரும்புதலுக்கு தான் செய்த தவறின் நிமித்தம் நியாயம் விசாரிக்கவும் அமைந்த பட்டணந்தான் அடைக்கலப்பட்டணம்.

## நாம் கிறிஸ்தவர்களாய் மாறாதிருந்தோமானால் எங்கேயிருப்போம்?

***Where would be if we had not become christians?*** *J.C.Choate*




நாம் கிறிஸ்தவர்களாகவும் கர்த்தருடைய சபை அங்கத்தினர்களாகவும் மாறாதிருந்தோமானால் நாம் எங்கேயிருப்போம் என நீங்கள் எப்போதாவது அறிய ஆவலுடனிருந்திருக்கிறீர்களா? நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியாதிருந்தோமானால், அவர் நம்முடைய ஜீவியத்தை மாற்ற அனுமதிக்காதிருந்தோமானால், இன்று நாம் யாராக இருப்போம்? நாம் எங்கேயிருப்போம்? நாம் என்ன செய்து கொண்டிருப்போம்? நாம் ஜீவிக்கிறவர்களாய் இருப்போமா?

அப்போஸ்தலர்களையும், வேதவாக்கியங்களில் நன்கு அறியப்பட்டுள்ள மற்ற புருஷரையும் ஸ்திரீகளையும் பாருங்கள்: தேவனுடைய பெரிய ஊழியர்களாய் மாறினவர்களையும், காலகாலமாக கீர்த்திபெற்றவர்களையும் பாருங்கள், ஏனென்றால் அவர்களுடைய சரித்திரங்கள் தேவனுடைய புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன. அவர்கள் தங்களுடைய ஜீவியங்களை கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடாதிருந்திருப்பார்களேயானால் அவர்களுக்கு என்ன நிகழ்ந்திருக்கும்?

உதாரணமாக, மனிதவர்க்கத்தின் மிகப்பெரிய வரலாற்றில், கர்த்தரில்லாமல் ஏழ்மையான மீனவன் பேதுரு என்னத்தைப் பெற்றிருப்பான்?

சவுல் மனந்திரும்பாமலிருந்திருப்பானேயானால், அவன் முடிவு என்னவாயிருந்திருக்கும்?

முதலாவது கர்த்தருக்கு கீழ்ப்படிந்ததால் மட்டும் பெரிய மாற்றத்தைக்கொண்டு வரவில்லை, மாறாக விசுவாசம் மிகமுக்கியமானதாயிருந்தது. சிலர் தங்கள் ஜீவியத்தில் விழுந்துபோனார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். யூதாஸ் ஒரு பிரதான எடுத்துக்காட்டு. மற்ற அப்போஸ்தலர்களுடன் அவனுடைய முடிவை ஒப்பிட்டுப் பார்க்கையில் அவனுடைய விசுவாசம் எப்பேர்பட்ட வித்தியாசத்தை உருவாக்கினது! அப்புறம் அனனியா, சப்பீராளுடைய சம்பவமும் உண்டு, அவர்களுடைய பொய்யினிமித்தம் பரிசுத்த ஆவியினால் எப்படி அடிக்கப்பட்டு அவர்கள் மரண மடைந்தனர்! பழையஏற்பாட்டில் நாதாபு மற்றும் அபியு பற்றிய காரியம் என்னவாயிற்று? மேலும், மாபெரும் பார்வோன் கூட தேவனுக்கு எதிர்த்து நின்றதால் தோற்றுப்போனான், மற்றும் ஏரோது ஜனங்களுக்குப் பிரசங்கித்தபோது, ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, இது தேவ சத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் கர்த்தருடைய தூதனால் அடிக்கப்பட்டு இறந்தான்.

நாம் கர்த்தருடைய சித்தத்திற்கு ஏற்ப இசைந்து போகாதிருந்தோமானால், நாம் இழந்து போனவர்களாக மட்டுமல்ல, மாறாக நாம் சில சாதாரணவேலையின் கீழ் தங்கிவிடுவதிலே அதாவது , திருமணம் செய்திருக்கவும், விவாகரத்து பண்ணவும், மீண்டும் மறுமணம் செய்யவும், குடிகாரனாக மாறுகின்றவனாகவும், ஒரு போதைக்கு



பெண்கள் பகுதி

# முதன்மையும் நன்மையும்

## The First and the best

*- Glory Arjunan*



யார் அவள்? எதைப் பற்றி அறிவித்தாள்? லூக்கா2:36,37-ல் அவளைக் காணலாம், "ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானதுமுதல் ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயதுசென்றவளுமாயிருந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமலும், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள். அவளும்அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் (இயேசுவை) பேசினாள்". இந்த தீர்க்கதரிசி எருசலேமிலே தங்களுக்கு மீட்புண்டாக வேண்டும், இரட்சிப்புண்டாக வேண்டுமென காத்திருந்த யூதர்களுக்கு இயேசுவைக் குறித்து அறிவித்தாள். பாவத்திலிருந்து யாவரையும் மீட்கப்போகிற இயேசு இவர்தான் என்று யூதர்களுக்கு அறிவித்தாள். அன்பு சகோதரியே, அவளுடைய சூழ்நிலைகளை அறிந்தீர்களா? ஒன்று, அவள் தன் புருஷனோடு ஏழுவருஷம் மட்டுமே வாழ்ந்தவள், அடுத்தாக, அவள் ஏறக்குறைய எண்பத்துநாலு வயதை அடைந்த விதவை. கன்னிப்பருவத்தில் விவாகம் செய்து ஏழு ஆண்டுகள் மட்டுமே புருஷனோடு வாழ்ந்து அதன்பின் ஏறக்குறைய எண்பத்துநாலு வயது வரை விதவைக் கோலம் பூண்டவளாயிருந்த அவளது மனநிலை எப்படியிருந்திருக்கும் என்று சற்றே சிந்திபோம்! அவள் நிச்சயமாகவே தன்னுடைய விதவையிருப்பை குறித்து அதிகக் கவலைகொள்ளா தவளாக இருந்திருக்கலாம். அதனால் தான் அவள் தேவாலயத்தை அண்டி, அதை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி ஆராதனை செய்து கொண்டிருந்தாள் என வாசிக்கிறோம்.

இந்த அன்னாளை நினைக்கும் போது எனக்கு மெய்யாகவே மெய்சிலிர்க்கிறது. பொதுவாக, சமுதாயத்தில் பிள்ளைகளெல்லாரும் தாயையும் தகப்பனையும் விட்டுச் சென்று விடுவார்கள், ஆனால் கணவனும் மனைவியும் மட்டும் கடைசிவரை ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பார்கள் என்பர். ஆனால் இந்த அன்னாள் அந்த உறவையும் இழந்த போதிலும் தேவனைப்பற்றிக் கொண்டது எவ்வளவு விசேஷித்த மேன்மையாயிருக்கிறது! சங்கீதக்காரனாகிய தாவீது இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்கிறார். ஆம், இதன்படி இவள் ஒரு பாக்கியவதி, தேவலாயத்தை விட்டு நீங்காமல் உபவாசித்து ஜெபம் பண்ணி, அதாவது மரியாள் இயேசுவின் பாதத்தை விட்டு நீங்காமல் நல்ல பங்கை தெரிந்துகொண்டதுபோல, இவளும் தேவாலயத்தை விட்டு நீங்காது இருந்திருக்கிறாள்.

அன்பு சகோதரியே, நம்மை சுற்றிலும் உள்ள அநேகர் இந்த மீட்பரைப் பற்றி அறியாமலிருக்கிறார்கள். இந்த மீட்பராகிய இயேசுவைக் குறித்து அறிவித்தும் ஏற்றுக்கொள்ளாமல் ஏளனம் செய்கிறவர்களும் அநேகர். இப்படியிருக்க, நீங்கள்

**நாமக்கல் மாவட்டம் பாண்டமங்கலம்**
**கிறிஸ்துவின் சபையின் ஊழியத்தின் மூலமாக**
**ஞானஸ்நானம் பெற்றவர்கள் ஐந்துபேர்**




**"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்"**
**மாற்கு 16:16**




**தேனி மாவட்டம் ஆனைமலையான்பட்டி**
**கிறிஸ்துவின் சபையின் ஊழியத்தின் மூலமாக**
**ஞானஸ்நானம் பெற்றவர்கள் ஏழுபேர்**



அடிமையானவனாகவும், சாபத்தின் பழக்கத்தில் வளர்ந்தவனாகவும், எல்லாவிதமான பிரச்சனைகளில் அகப்பட்டவனாகவும் மாறி அதிலே திருப்தியடைந்தவர்களாயிருக்கலாம்.

நாம் இப்பேர்பட்ட வழிகளில் சென்றிராதவர்களாயிருந்தாலும் கூட, நாம் இறுதியில் ஒன்றையும் பெற்றிராதவர்களாகவே நிலைத்திருப்போம், நம்முடைய வாழ்வு சாதகமான எந்த மாற்றத்தையும் இவ்வுலகில் உருவாக்கியிருக்காது. மற்றபடி நாம் வெறுமனே வாழ்ந்து, மரித்து, இறுதியாக மொத்தத்தில் நித்தியஜீவனை இழந்தவர்களாகவே இருந்திருப்போம். இது பயங்கரமானதல்லவா?

ஆனால் நாம் ஒரு கிறிஸ்தவனாக மாறி இருந்தாலும்கூட, விசுவாசமில்லாதவர்களாய் இருந்தோமானால், நம்முடைய ஆத்துமாவை இழந்தவர்களாக; உலகத்தினுள் மீண்டும் சென்று, பாவம் நிறைந்த, ஏமாற்று வாழ்க்கை வாழ்கின்றவர்களாக, ஒருவேளை சில தவறான சமயக் குழுவில் இணைந்தவர்களாக, கர்த்தருடைய வழிக்கு விரோதமாக வாழ்கின்றவர்களாக போய்விடுவோம். இப்படிப்பட்ட காரிங்களை நினைப்பதற்குக் கூட பயமாகயிருக்கின்றது.

தேவனுடைய பிள்ளையாக நாம் மாறும்போது எப்பேர்பட்ட வேறுபாடு! பல கிறிஸ்தவர்கள் தொடர்ந்து வெற்றியுள்ளவர்களாகவும் பிரசித்திபெற்றவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் வியாபாரத்தில் வெற்றியடைகின்றனர், தங்களுடைய சமுதாயத்தில் தலைவர்களாக மாறுகின்றனர், உயர்வான கல்வியறிவு பெற்றவர்களாகவும், கல்லூரி, பல்கலைகழகங்களின் தலைவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் கிறிஸ்தவர்களாக, இருக்கின்றதாலும், கிறிஸ்தவ கோட்பாடுகளின்படி வாழ்கின்றதாலும் எண்ணிலடங்காத மற்ற பகுதிகள் மாபெரும் வெற்றியினையும், வளர்ச்சியினையும் காணுகின்றது.

எப்படியோ, கிறிஸ்தவர்கள் வாழ்க்கையில் எவ்வாறு இந்த நிலைமையை அடைந்தார்கள் என அறியாது அடிக்கடி கண்சொருகிப்போன சுபாவமுடையவர்களாக இருப்பதே பிரச்சனையாக இருக்கிறது. அவர்கள் முழு ஆசீர்வாதங்களும் தங்களாலே வந்ததைப் போல நினைத்து, "பாருங்கள் நான் என்னமாய் இதைச் செய்திருக்கிறேன், இதை நிறைவேற்றி முடிக்க எத்தகைய திறன் கொண்டிருக்கிறேன்!" என சொல்லுகிறார்கள். உலகத்தில் அதிகமான ஜனங்கள் வெற்றி பெறுகின்றனர், ஆனால் ஒரு கிறிஸ்தவனாக மாறியிருக்கிறவன் தன்னுடைய வாழ்வில் கிறிஸ்தவ கோட்பாடுகளை செயல்படுத்தும்போதும் சத்தியத்தோடும், நீதியோடும் சம்பந்தப்படாதவைகளைப் பழக்குவிப்பதிலிருந்து விலகி இருக்கும் போதும் இதைப்போல் வெகு அதிகமான வெற்றிகளைப் பெற்றுக்கொள்ளுகிறான்.

ஒருவன் கிறிஸ்தவனாக மாறுகின்ற போது, அவன் தன் ஜீவியத்தை மாற்றுகிறான். உலகை வித்தியாசமான முறையில் காண்கின்றான். அவன் கிறிஸ்துவையும், பின்பற்றும்படிக்கு கிறிஸ்தவக் கோட்பாடுகளையும், அடையும்படிக்கு இலக்கையும் பெற்றிருக்கிறான். அவன் ஒரு கடின உழைப்பாளி, தன்னுடன் வேலை செய்கிறவர்களிடத்தில் மரியாதையையும் பெற்றிருக்கிறான், மற்றவர்களோடு நடந்து கொள்ளுவதில் நேர்மையுடனிருக்கிறான், தன்னால் இயன்ற மட்டும் தன்னுடைய வேலையை சிறப்பாக செய்ய முயற்சிக்கிறான். அவன் தனக்கு உதவிசெய்து, வெற்றியடைய தன்னை ஊக்கப்படுத்தும் கிறிஸ்தவர்களோடு ஐக்கியம் கொண்டிருக்கிறான். அவனுடைய

சரீர ஜீவியமும், அவனுடைய குடும்ப அங்கத்தினர்களின் ஜீவியமும் மாற்றமடைந்திருக்கிறது. அவர்கள் சாப்பிடுகிற, குடிக்கிற பொருட்களினாலும் அல்லது தங்களுடைய ஜீவியத்தினாலும் அவர்கள் தங்களுடைய சரீரங்களை தகாத விதமாக பயன்படுத்துவதில்லை, எனவே அவர்கள் வழக்கமாக நல்ல உடல்நலம் பெற்றிருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய பணத்தை நன்றாக குடிப்பதற்கும், சூதாடுவதற்கும், கெட்டபழக்க வழக்கங்களுக்கும் வீணாக்காதபடியினால் கல்விக்காகவும், வியாபாரத்திற்காகவும், மற்ற தகுதியான நல்ல காரியங்களுக்காகவும் செலவு செய்கின்றனர்.

எனவே நம்முடைய ஜீவியத்தையும் எதிர்காலத்தையும் இவ்வுலகில் மாற்றுகின்ற கிறிஸ்தவத்தை பெற்றிராதிருந்தோமானால் நாம் எங்கேயிருப்போம், மேலும் நம்முடைய நித்தியத்தை எங்கே கழிப்போம்?

ஜீவனுக்காகவும் மரணத்திற்காகவும் நீங்கள் ஏதேனும் பெற்றிருக்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருக்கும்படிக்கு நான் உங்களை ஊக்கப்படுத்துகிறேன். கிறிஸ்தவம், உங்கள் ஜீவியத்தை ஒரு நித்திய வெற்றியுள்ள ஜீவியமாக மாற்றட்டும்.

## ஒரு கோதுமை விதை
## A Grain of Wheat



ஒரு கோதுமை விதை சாகாவிட்டால்,
அது ஒரு தனி விதையாக, தனிமையில் நிலைத்திருக்கும்,
நாம் நமது சுயத்தை சாகடிக்காவிட்டால்,
நாம் நமது கர்த்தருடைய அறுவடை விதையாக இருக்கமுடியாது.

அவர் ஜீவித்தார், அவர் நேசித்தார், நமக்காக எல்லாவற்றையும் கொடுத்தார்
ஆகவே அவர் தம்மையே "தானியத்தின் விதையாக" விதைத்தார்,
அவருக்காக, நமக்கு அறுவடை வருகிறது,
மரணம் மரிப்பதற்காகவும் ஜீவன் ஜெனிப்பதற்காகவும்.

இயேசு துரிதப்படுத்துகிறார், தம்மைப் பின்பற்ற
நிலைத்திருந்து, அதிக கனிகளைக் கொடுக்க,
நாம் கல்வாரியை அனுபவிக்கத் தேவையில்லை
நாம் விதை விதைக்க வேண்டியதே அவசியம். *- Calton Elkins **(TVOTI)***

"கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்" - ரோமர் 8:10



சரீரத்தோடுள்ள உறவில் தலையின் பங்கு என்ன? இது தன்னிச்சையான, தன்னிச்சையற்ற செயல்பாடுகளின், எண்ணங்களின் பிறப்பிடத்தின் முனையாக இருக்கிறது. தலை பார்க்கிறது, ஆசைப்படுகிறது, விரும்புகிறது; ஆனால் இது ஒன்றோடொன்று இணைந்து வேலைசெய்யும் சரீரத்தின் அங்கங்களை, பார்வையை நேர்படுத்தும்படிக்கு சார்ந்திருக்கவேண்டும்.

கிறிஸ்து அற்புதத்தினால் இருதயங்களை மாற்றும்படிக்கு பூமிக்கு இறங்கி வந்திருக்கிறாரா? தேவதூதர்கள் உலகத்தை சுற்றிவந்து சுவிசேஷத்தை பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார்களா?

தேவன் ஆதியிலிருந்தே மனிதனுக்கு இரட்சிப்பின் வழியைத் திறக்கும் நோக்கிற்காகவே இவையெல்லாவற்றையும் செய்திருக்கிறார். கிறிஸ்து அந்த இலக்கை அடையும்படிக்கு மரித்தார். ஆனால்

தேவன் பரலோகத்திலிருந்து ஜனங்களிடம் நேரடியாக பேசுகிறாரா? கிறிஸ்து இருதயங்களை மாற்றும்படிக்கு அற்புதங்களோடு இறங்கிவந்தாரா? தேவதூதர்கள் உலகத்தைச் சுற்றிவந்து சுவிசேஷத்தைப் போதிக்கின்றார்களா? இல்லை.

பிறகு இவைகளெல்லாம் யாருடைய கரங்களில் உள்ளன? அவருடைய சரீரத்தின் கரங்களில். தலை உலகத்தைப் பார்க்கிறது; அவர் இழந்துபோனவர்களுக்காக ஏங்குகிறார்; எல்லாரும் சுவிசேஷத்தின் அன்பையும், இரக்கத்தையும் உணரவேண்டுமென அவர் விரும்புகிறார். மூளையிலிருந்து கண்களுக்கும், நாவிற்கும், கைகளுக்கும், கால்களுக்கு இருதயத்திற்கும் செய்திகள் அனுப்பப்பட்டு வருகிறது. அங்கே ஒருமித்த பிரதியுத்திரங்கள் காணப்படும்போது, அநாதி தீர்மானங்கள் நிறைவேறுகிறது என்று அவர் அறியவேண்டும் என்பது எப்பேர்பட்ட மகிழ்ச்சி!

ஆனால், தலையிலிருந்து செய்தி அனுப்பப்பட்டு, போதனைகளுக்கு செவிசாய்க்க தம்முடைய சரீரத்தின் அங்கங்கள் மறுக்கும்போது அவர் ஏமாற்றத்தையும் மன வேதனையையும் அனுபவிக்கவேண்டும் என்பதை நினைத்துப்பாருங்கள். எத்தனை முறை அவர் நம்முடைய சோம்பல் அல்லது செயலற்ற நிலையினால் சிறைப்படுத்தப்படுகிறார் என்று அவதூறு செய்யப்படுகிறது என்பதையும் சிந்தியுங்கள். தேவனுடைய சாராம்சம், எது என்பதை சிந்தியுங்கள். அவருடைய சரீரத்தில் அங்கங்கள் அவரைக் காட்டிக்கொடுத்து துரோகம் பண்ணும்போது எவ்வளவு மனவேதனை அடையவேண்டியுள்ளது என்பதையும், நம்முடைய வெட்கக்கேடான செயல்களால் எவ்வளவு அதிகமாக அவருடைய மகிமை, பொய், வஞ்சனை, ஒழுக்கம்கெட்ட வாழ்வு, தீமையான நினைவுகளில் சந்தோஷப்படுதல், கெட்டவார்த்தைகளை பயன்படுத்துதல், வீட்டைக் களைத்தல், திக்கற்றவர்களுக்கு உதவி செய்வதைத் தவிர்த்தல் போன்றவற்றில் அவர் விருப்பம் கொள்வாரா? அவருடைய சரீரமாக நாம் எதைச்செய்தாலும், அவருக்கென்றே நேரடியாகச் செய்வோமாக.


வாரந்தோறும், அவருடைய சரீரத்தில் பங்குகொள்ளுவதினால் அவருக்குள் நாம் ஜீவிக்கிறவர்களாவோம். அனுதினமும் நாம் அவருடைய சரீரமாக இருக்கிறபடியால் நாம் அவரில் ஜீவிப்போமாக!

"கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல"... - ரோமர் 8:10

# தலை மற்றும் அவருடைய சரீரம்

## The Head and His Body

*- Betty*



“எப்படியெனில், சரீரம் ஒன்று அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்... நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்” (1கொரி.12:12,27).

இந்த வசனம் “.... அந்தப்பிரகாரமாக கிறிஸ்துவின் சரீரம் இருக்கிறது” என்று மாத்திரம் கூறவில்லை, அது ஒன்றாகவே; இணைந்திருக்கிறது என்கிறது. ஆனால் இந்த வசனம், “... அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவுமிருக்கிறார்...” என்றும், தம்மை தலையாகவும் அவருடைய சரீரமாகிய சபையாகவும் அடையாளப்படுத்துகின்றார். இப்படியாக முழுவதும் கிறிஸ்து என்று அழைக்கப்படுகிற முழுவதும் ஒன்றுபட்ட ஒன்றாகயிருக்கிறது.

நம்முடைய மனங்கள் அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கின மாதிரியையும் மற்றும் மனுஷனை பாவத்தின் தண்டனையிலிருந்து விடுவிக்கும்படிக்கு தாமே சுமந்துதீர்த்த தம்முடைய இயற்கை நீதியையும் தெய்வீகத் தன்மையையும் பின்பற்றுகிறதா? தம்முடைய சொந்த நித்திய மகிமையைத் துறப்பதற்கும் மாம்சத்தில் பிறப்பதற்கும் இது அவருக்குப்போதுமானதாகயிருக்கவில்லை; நம்முடைய பாவங்களை தாமாக ஏற்றுக்கொள்ளும் பொருட்டு சிலுவையின் மூலம் மரணத்தின் அவமானத்தை சுமப்பதற்கு இது அவருக்குப் போதுமானதாகயிருக்கவில்லை. அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அநேகமாக இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனபடியினால், அவர் மேலும் மனிதர்களாலான சரீரத்திற்கு மேலான தலையாக இருக்கும்படிக்கு தம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

அடிக்கடி, மாம்ச சரீரத்தை அடிமைப்படுத்தக் கூடிய இன்னிசையைப் பார்க்கையில், நாம் சங்கிலியால் கட்டப்பட்ட பலமுள்ள சரீரத்தைக் கொண்டிருக்கும் பயத்தில் உள்ளுக்குள் நெளிகிறோம் அல்லது மனமுடைந்து அல்லது ஆரோக்கியமும், புத்தியுமுள்ள மனம் செயலிழந்துபோன சரீரத்தில் சிறைபட்டு போகிறோம். வயது முதிர்ந்த சிறையிருப்பு ஏறக்குறைய பீதியடையச் செய்கிறது. இப்படிப்பட்ட சிறையிருப்புகளுடன் வாழ்வது ஒவ்வொரு வருடமும் எப்பேர்பட்ட ஏமாற்றமும் மனமுடையதலுமாயிருக்கும்.

சரீரத்தினால் சுமந்த பாடுகள்


நாம் சிலநேரங்களில் அவருடைய செயலாக, சில சமயங்களில் ஆர்வமிக்கவர்களாக, சில சமயங்களில் சோம்பலாக, சில சமங்களில் எதிர்க்கிறவர்களாக, சில சமயங்களில் செயலிழந்தவர்களாக, சில சமயங்களில் இவ்வுலகில் செத்த சரீரமாக இருக்கிறபடியால் மெய்யான வழியில், நம்முடைய உயிர்த்தெழுந்த கிறிஸ்து ஒவ்வொரு நாளும் நம்முடைய தலையாக இருப்பதில் எல்லைக்குட்பட்ட தடைகளை அனுபவிக்கிறார்.



# ஏன் கிறிஸ்துவின் சபையை தேடிப்போகவேண்டும்?

## Why, Should we seek the church of christ?

- V.Paulraj



நியாயப் பிரமாணத்தில் "ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" என்று தேவன் கட்டளையிட்டார். ஆறு நாட்களுக்குள்ளே எல்லாவற்றையும் சிருஷ்டித்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தபடியால் ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கும்படி தேவன் கட்டளையிட்டிருந்தார். ஒரு ஓய்வு நாளில் இஸ்ரவேல் புத்திரரில் விறகு பொறுக்கிக் கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டுபிடித்து, அவனைப் பாளையத்துக்குப் புறம்பே கொண்டு போய்க் கல்லெறிந்தார்கள் அவன் செத்தான் (எண்.15:32). இன்றைக்கு இந்தக் கட்டளையை சபை நடைமுறைப்படுத்துமானால் எத்தனை பேர் உயிரோடே இருக்க முடியும்? அதனால் தான் முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்த தினிமித்தம் மாற்றப்பட்டது (எபி.7:18).

வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும், உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மத்.5:20). கிறிஸ்து சபைக்காக பாடுகளை அநுபவித்தார் (அப்.1:3). கிறிஸ்து தமது ரத்தத்தை சிந்தினார் (1கொரி.7:23). கிறிஸ்து சபைக்காக ஜீவனை விட்டார் (மாற்.15:37). கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறார் (கொலோ.1:18). வேதம் இவ்விதமாக சொல்லும்போது; அவரால் மீட்கப்பட்டவர்கள் யாராக இருக்கமுடியும்? கிறிஸ்துவின் சபையார் என்பதுதானே சரி. மற்ற எந்த பெயரில் சபையாக கூடினாலும் அவர்கள் தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபையார் அல்ல. அவர்கள் நாமகரணக் கூட்டத்தார். ஆகையால் எரேமியா தீர்க்கதரிசி சொல்கிறார்; "வழிகளிலே நின்று பூர்வபாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து நல்ல வழி எங்கே என்று பார்த்து அதிலே நடவுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்" (எரே.6:16).

நம் ஆண்டவர் இயேசுவும் "என்னைத்தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே கடைசி நாளில் அவனை நியாயந்தீர்க்கும்" என்றார். கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமலும் ஏதோ ஒரு வழியில் ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டு ஏதோ ஒரு கூட்டத்தாரோடு ஆராதனையில் கலந்து கொண்டால் போதும் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ளலாம் என்றும் நேராக தேவனுடைய வலது பாரிசத்துக்கு போய்விடலாம் என்றும் கற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும், வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் (1கொரி.15:24). அப்பொழுது தேவனுடைய ராஜ்யமாம் கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்காதவர்களின் நிலைமை என்னவாகும்?

இயேசு ஞானஸ்நானம் பெறுவதற்காக யோவானிடம் யோர்தானுக்கு வந்தபோது, யோவான் அதற்கு தடைசெய்து நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க நீர் என்னிடம் வரலாமா? என்று சொன்னதைக்கேட்டு இப்பொழுது இடங்கொடு இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார் (மத்.3:13-15). இயேசுவின் ஞானஸ்நானம் அவருடைய நீதியின் நிறைவேற்றத்தை வெளிப்படுத்துகிறது.

பெண்கள் பகுதி

# தேவனிடத்திற்குச் செல்லும் வழியை மனிதன் கண்டு பிடிக்க முடியுமா?

*-Betty*

## Can Man Find the Way to God?

### சிருஷ்டிப்பை பற்றிய குறிப்புகள்

### Accounts of the creation




**தே**வன் ஒருவர் இருக்கிறார் என்பதை உலகில் இன்று அநேக ஜனங்கள் மறுதலித்தாலும், தேவன் ஒருவர் இருக்கிறார், அவரே தம்முடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினாலே சகலத்தையும் நிலைநிற்க செய்திருக்கிறார், ஒவ்வொரு மார்க்கமும் சிருஷ்டிப்பை குறித்த ஒரு சம்பவத்தை கொண்டிருக்கிறது. இவைகளில் பாரம்பரிய கதைகளுடன் கூடிய கேடுபாடுகள் மற்றும் கற்பனையான மிகைப்படுத்துதல்கள் இருந்த போதிலும் காலங்கள் கடந்து செல்லும் பொழுது அவைகள் குறிப்பிடத்தக்க மற்றும் அங்கீகரிக்கத் தக்கவகையில் யாவருக்கும் பொதுவான **சத்தியத்தின் நூலிழைகளாக** இருக்கின்றன.

### சிருஷ்டிப்பு பற்றிய குறிப்புகள்

### மாயன்

மாயன் என்ற இந்திய பழங்குடி இனத்தவர்கள் பூமத்திய ரேகைக்கு மேற்கே ஏறத்தாழ கி.மு.1800 -ம் ஆண்டுகளில் வாழ்ந்தார்கள். அவர்களுடைய **போப்புல் ஊ,** என்னும் புனித நூலிலே மிகவும் ருசிகரமான இவ்வகை செய்திகளை வாசிக்கிறோம்.

"உலகம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பு அமைதி மற்றும் நிசப்தம் ஆளுகை செய்து வந்த பெரும் இராஜாக்களாக இருந்தனர். அப்பொழுது ஒன்றும் இருக்கவில்லை... பூமியின் முகமும் காணப்படவில்லை. அங்கே அசைவற்ற சமுத்திரமும், வானத்தின் ஒரு பெரிதான வெறுமையும் மாத்திரமே இருந்தன... அது இரவாக இருந்தது, இருளில் அமைதி நிலைநின்றது.

"தட்டையானதும், வெறுமையானதுமாக சமுத்திரம் மாத்திரம் இருந்தது, அதுவும் சுவாசம் இன்றி இருந்தது.

"பூமி தன் முகத்தை காட்டும்படியாக ஜலமானது அதின் வழியை கீழ்நோக்கி உருவாக்குவதாக. பூமி!" என்று சிருஷ்டிகர்கள் அழைத்தார்கள். அவர்கள் ஒரே ஒரு முறை அழைத்தார்கள், அங்கே அது இருந்தது. ஒரு மூடுபனியிலிருந்து, தூசு படிந்த மேகத்திலிருந்து உடனே மலைகள் தோன்றின.

" இந்த ஒரு தனிப்பட்ட வார்த்தையில் (சிருஷ்டிகர்களிடமிருந்து) ஊசியிலை மரங்களின் நீண்ட குறுகிய பள்ளங்களும், பைன்மரங்களும் தங்களுடைய கருத்துக்களை வெளியே தோன்றச் செய்தன... "சிருஷ்டிகர்கள் அடிக்கடி கேட்டார்கள், "இந்த அமைதி மரங்களின் கீழே என்றைக்கும் ஆளுகை செய்யுமா?" என்று தி டீ ரென்று அங்கே மான், பறவைகள், சிறுத்தைகள், சர்ப்பங்கள் போன்றவைகள் இருந்தன"

"நமது மகிமை மரங்களின் வழியே ஒரு மனுஷன் ஒரு பாதையில் நடக்கும் வண்ணம் இருப்பதாக என்று சிருஷ்டிகர்கள் அழைத்தார்கள்" (போப்புல் ஊ, சார்லஸ் பெல்லெக்ரினோ என்பவரால் எழுதப்பட்ட "சோதோம் கொமாராவுக்கு திரும்புதல்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளபடி)



### இந்தியர்கள்

இந்து மதத்திற்கான ரிக் வேதத்தில் நாம் சிருஷ்டிப்பை குறித்த ஒரு பாடலை காண்கிறோம். இராதா கிருஷ்ணன் மற்றும், மூர் என்பவர்களால் வெளியிடப்பட்ட பாரம்பரியம் மற்றும் இந்திய தத்துவம் என்ற நூலில் இருந்தது. கீழ் காணும் சுருக்கமான கருத்துக்களில் பழக்கமான கருத்துகள் இருந்த போதிலும், கேள்வி கேட்கும் அமைப்பானது எதை வெளிப்படுத்துகிறதென்றால் இந்நூலின் மூலப்பகுதி தேவனிடத்திலிருந்து வந்த ஒரு வெளிப்படுத்துதல் என்பதை பார்க்கிலும் முன்னோர்களின் பாரம் பரியத்திலிருந்து எடுத்து எழுதப்பட்டது.

"இல்லாதது அப்பொழுது இருக்கவில்லை
காற்றும், வானமும் இருக்கவில்லை, அதற்கு அப்பால் இருந்தது
எது மறைவாயிருந்தது? எங்கிருந்தது? யாருடைய பாதுகாப்பில்?
அங்கே ஆழம் இருந்ததா, அளவிடமுடியாஜலம் இருந்ததா?

"அப்பொழுது மரணம் இருக்கவில்லை, முடிவில்லா ஜீவனும் இருக்கவில்லை
அங்கே இரவும் இல்லை, பகலும் இல்லை, அங்கே எந்த முன்னடையாளமும் இல்லை
அதனுள் இருக்கும் ஏதோ ஒரு அத்தியாவசியமான சக்தி ஒன்றினால் காற்றில்லாமல் ஒன்று சுவாசித்தது
அதைப்பார்க்கிலும் அதற்கு அப்பால் வேறெந்த பொருளும் இருக்கவில்லை

"அங்கேயிருந்த இருள் முதலாவதாக மறைக்கப்பட்டதாய் இருந்தது
குறிப்பிட்ட எந்த அடையாளங்களும் இல்லாமல், இவை அனைத்தும் ஜலமாக இருந்தது
வெறுமையாயிருந்த அது மூடப்பட்டதாகிக் கொண்டிருந்தது
அந்த ஒன்று உஷ்ணத்தின் சக்தியினால் இருக்கும் நிலைக்கு வந்தது

"ஆதியிலே ஒருவருக்குள் ஆசை பிரவேசித்தது
அதுவே சிந்தனை விளைவின் ஆதிவித்தாக இருந்தது
ஞானிகள் அவர்களுடைய இருதயங்களில் ஞானத்தோடு ஆராய்ந்து
இருப்பதற்கும் இல்லாததற்கும் உள்ள பந்தத்தை கண்டறிந்தார்கள்

"அவர்களுடைய விஸ்தாரமான ஒளிக்கற்றை இருளின் குறுக்கே சென்றது
ஆனால் அது மேலானதாயிருந்ததா அல்லது கீழாக இருந்ததா?
சிருஷ்டிக்கும் சக்தியும், உற்பத்தி செய்யும் வல்லமையும் அங்கே இருந்தது
கீழே சக்தி இருந்தது, மேலே திடீரென்று உந்தித்தள்ளும் விசை இருந்தது

"நிச்சயமாக அதை அறிந்திருக்கிறவர் யார்? யார் அதை அறிவிப்பார்?
அது எப்போது பிறந்தது? இந்த சிருஷ்டிப்பு எப்பொழுது வந்தது?
இவ்வுலகத்தின் சிருஷ்டிப்புக்கு பின்னே தேவர்கள் பிறந்தார்கள்
இவ்வாறு இருக்க எப்பொழுது இது உதயமாகி இருக்கிறது என்பதை யார் அறியக்கூடும்?

"சிருஷ்டிப்பு எப்பொழுது உதயமாகியது என்பதை யாரும் அறியாதிருக்கிறார்கள்
அதை மிக உயர்வான உன்னதத்திலே அளவீடு செய்தவர்
அதை உருவாக்கியிருக்கிறாரா, இல்லையா
அவர் ஒருவரே அறிந்திருக்கிறார் அல்லது அவர் அறியாமல் இருக்கலாம்

**"நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி" – யோபு *38:4***